**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 191 /2023**

**Deposition of P.W.** 8

Name : திரு. அருளப்பன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 26.11.**2025

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் தாழமுத்து நகர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 21.03.2021ம் தேதி இரவு 22.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்த போது உதவி மேலாண்மை அலுவலர் திரு. ஸ்டீபன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைபடி நிலைய குற்ற எண்.158/2021 பிரிவுகள் 294(பி), 341, 353 இ.த.ச மற்றும் பிரிவு 3(1) தமிழ்நாடு பொது சொத்துக்கனை சேதப்படுத்துவதை தடை செய்யும் சட்டப்படி முதல்தகவல்அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4. அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரணைக்கு வைத்தேன். காவல்

ஆய்வாளர் என்னை விசாரித்தார்

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நட்சத்திர வேட்பாளர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்யும் போது காவல்துறை பாதுகாப்பு இருக்கும் என்றால் சரிதான். 21.03.2021ம் தேதி பூக்கடை சந்திப்பில் நடந்த தேர்தல் பிரச்சாரத்தில் போலீஸ் பாதுகாப்பிற்கு சென்றிருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் அன்றைய தினம் நிலைய பொறுப்பில் இல்லாததாலும் பொதுநாட்குறிப்பை பராமரிக்காததாலும் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் நிலைய பொறுப்பில் இல்லாமல் மேலதிகாரிகள் உத்தரவுப்படி போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. தனி நபர் வேளாண்மைதுறை அலுவலர் என்று வந்தால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வீர்களா என்றால் பிடிக்கக்கூடிய குற்றமாக இருந்தால் முதல் தகவல் பதிவு செய்வோம். அரசு அலுவலர் அல்லாதவர்களை அரசு அலுவலர்களாக யூகம் செய்வோம் என்றால் சரியல்ல. அ.சா.1ன் போனும் அ.சா.2ன் கேமராவும் பொது சொத்து என்றால் சரியல்ல. அவர்களது தனிப்பட்ட பொருட்கள் என்றால் அரசு பணிக்காக பயன்படுத்தியதால் அரசு சொத்தாகும். அரசு பணிக்கு பயன்படுத்தியதாக ஆவணங்கள் கொடுத்தார்களா என்றால் புகார் மனுவில் குறிப்பிட்டிருந்தார்கள். 21.03.2021ம் தேதி இதே பிரச்சாரத்தின் போது குற்ற எண்.159/2021 என வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேலதிகாரிகள் கேட்டதற்கு இணங்க பொய்யாக பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.